# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**இலங்கை தேசிய கணக்காய்வு அலுவலக அதிகாரிகள் 35 பேர் இந்தியாவின் iCISA இல் நடைபெற்ற ஆளுமைவிருத்தி செயல்திட்டத்தில் பங்கேற்பு**

இலங்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் (NAO) 35 அதிகாரிகளுக்கான ஆளுமை விருத்தி செயல்திட்ட அமர்வொன்று நொய்டாவில் உள்ள தகவல் முறைமைகள் மற்றும் கணக்காய்வுக்கான சர்வதேச நிலையத்தில் (iCISA) 2025 டிசம்பர் 08 முதல் 19 வரை ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

2. 2002 மார்ச்சில் நிறுவப்பட்ட iCISA, உயர்தரமான கணக்காய்வுப் பயிற்சியை ஊக்குவிப்பதற்கும், உலகளாவிய ரீதியிலான சிறந்த நியமங்களுடன் IT கணக்காய்வு நடைமுறைகளை ஒருங்கிணைப்பதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட, இந்தியாவில் உள்ள ஒரு முன்னணி நிறுவனமாகும். iCISA என்பது IT கணக்காய்வுக்கான INTOSAI செயல்திட்ட குழுவின் உலகளாவிய பயிற்சிகளை வழங்கும் அமைப்பாகும், இதுவரை 154 நாடுகளைச் சேர்ந்த 5000க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களுக்கு இந்நிறுவனம் பயிற்சிகளை வழங்கியுள்ளது.

3. இலங்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் வேண்டுகோளின் பேரில், இலங்கை கணக்காய்வு அதிகாரிகளுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட இப்பயிற்சி திட்டத்தின் முதல் வார அமர்வுகள், தகவல் முறைமையிலான ஆட்சி கட்டமைப்புகளான COBIT & அவற்றுடன் தொடர்புடைய ISO தரநிலைகள், INTOSAI வழிகாட்டல், நெருக்கடி நிலை அடிப்படையிலான கணக்காய்வு திட்டமிடல் & செயல்படுத்தல், சைபர் பாதுகாப்பு, தரவுகள் தனியுரிமை போன்றவற்றை உள்ளடக்கியிருந்தது. அத்துடன் உயர் செயற்பாட்டைக் கொண்ட கணனி கட்டமைப்புகளைக் கொண்டிருக்கும் நிறுவனங்களுக்கான விஜயம் மற்றும் ஆக்ரா மற்றும் புது டில்லியில் உள்ள சுற்றுலாத் தளங்களுக்கான விஜயம் ஆகியவற்றையும் உள்ளடக்கியிருந்தது. அத்துடன் தனியான ஆய்வுகள் மற்றும் நடைமுறை பயிற்சிகளாலும் இது ஆதரிக்கப்பட்டது. இரண்டாவது வார அமர்வுகளின்போது, கொள்முதல் செயன்முறைகளின் டிஜிட்டல் மயமாக்கல், அரச நிறுவனங்களின் இ-கொடுப்பனவு முறைமையின் (GeM) கணக்காய்வு, குறிப்பாக ரயில்வே மற்றும் பாதுகாப்புத் துறை

சார்ந்த கொள்முதல் கணக்காய்வுகள், தரவு பகுப்பாய்வு மற்றும் வளரும் தொழில்நுட்பங்களின் பயன்பாடு போன்ற தொனிப்பொருட்களை உள்ளடக்கிய பொது கொள்முதல் கணக்காய்வு செயற்பாடுகளில் கவனஞ்செலுத்தப்பட்டது.

4. ஆளுமை விருத்தித்துறையில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் இருதரப்பு ஒத்துழைப்பு கட்டமைப்பிற்கு அமைவாக இந்த பயிற்சி திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அத்துடன் 2025 ஏப்ரலில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களது அறிவிப்பின் அடிப்படையில் இலங்கை அதிகாரிகளுக்கு வருடந்தோறும் விசேடமாக வடிவமைக்கப்பட்ட 700 பயிற்சி ஆசனங்களை அதிகரித்தமை மூலம் இப்பயிற்சி திட்டங்கள் மேம்படுத்தப்பட்டன.

***********

**கொழும்பு**
**27 டிசம்பர் 2025**